பாராட்டுதல்

நேர்மைத் திறனை நிலை நிறுத்தும்

தேசமொன்றுக்கான

துணிவு வீரம் விடாமுயற்சி தியாகம்

ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்கா

டிசம்பர் 9ஆந் திகதி இடம் பெறும்

ஐக்கிய நாடுகளின் ஊழல் எதிர்ப்பு தினத்தை கொண்டாடும்

தேசிய நேர்மைத் திறன் விருது வழங்கல்

**தேசிய நேர்மைத்திறன் விருதுகள்**

நேர்மைத்திறன் மற்றும் நல்லாட்சியில் தலைசிறந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களை பாராட்டுதல்.

## உள்ளடக்கம்......


1. ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்காவின் விழுமியங்கள் -5-
2. ட்ரான்ஸ பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்காவின் வேலைக் கொள்கைகள் -5-
3. ஊழல் என்றால் என்ன? -6-
4. நேர்மைத் திறன் கொண்ட தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புதல் -8-
   - ஊழல் எதிர்ப்பை ஊக்கமளிக்க வேண்டிய தேவை என்ன? -8-
   - நேர்மைத் திறனை வலிமைப்படுத்துவதில் உள்ள தற்கால சவால்கள் -9-
   - ஐக்கிய நாடுகள் ஊழல் எதிர்ப்புத்தினம் -9-

5. தேசிய நேர்மைத் திறன் விருது -10-
   - தகைமை -12-
   - விசேடமான ஊழல் எதிர்ப்பு முயற்சிகள் -13-
   - தகைமைபெறாத பெறுமதிமிக்க முயற்சிகள் -13-
   - விருதுபெறத் தகைமை பெறாதோர் -13-
   - விண்ணப்பிப்பது எவ்வாறு? -13-
   - விண்ணப்பக் கோவை -14-
   - வெற்றியாளர்கள் பற்றிய அறிவித்தல் -14-
   - பரிசு -15-
   - விண்ணப்பங்கள் கோரல் -15-

6. தேசிய நேர்மைத்திறன் விருதுகள் குழு -16-
   - விருது ஒன்றினை வாபஸ்பெறல் -16-
   - விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் -18-

## இணைப்புகள்


A. விண்ணப்பப் படிவம் -19-

B. இணக்கக் கடிதம் -21-

C. நேர்மைத் திறன் உறுதிமொழி -22-

D. உறவினர் அல்லாத சிபாரிசுகள் -23-

E. விருது வழங்கும் குழுவினால் கருத்திற் கொள்ளப்படும் விதி முறைகள் -24-


## சுருக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| தேநேவி | : | தேசிய நேர்மைத்திறன் விருதுகள் |
| ட்இஸ்ரீல | : | ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீலங்கா |

# ட்இறீல இனது விழுமியங்கள்

வெளிப்படைத்தன்மை

வகை கூறல்

நேர்மைத் திறன்

ஜனநாயகம்

சார்புடைமை

நீதி மற்றும் நியாயம்

பக்கச் சார்பற்றது

துணிவு

சகிப்புத்தன்மை

**ட்இறீல இனது வேலைக் கொள்கை**

சக்தி பெறச் செய்தல்

அறிவுசார் நடவடிக்கைகள் உள்வாங்கல் மற்றும் பங்குகொள்ளல்

முன் எச்சரிக்கையுடனான விழிப்புணர்வு

நியாயமான நடவடிக்கை

வேற்றுமை காட்டாமை

# சிறந்த பழக்கவழக்கங்களை அடையாளம் காணல் மற்றும் விருத்தி செய்தல்
# தர நிர்ணயம்

**ஊழல் என்றால் என்ன?**

ஊழல் என்பது ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களை தனிப்பட்ட இலாபம், ஆதாயம் கருதி முறைகேடான விதத்தில் பயன்படுத்துதல் / துஷ்பிரயோகம் செய்தலாகும்.[1]

மற்றுமொரு வரைவிலக்கணமானது "தனிப்பட்ட அல்லது பொது கடமை அல்லது பொறுப்பு வழங்கப்பட்ட ஒருவர் அதனை நிறைவேற்றுவதற்காகவென தனக்கு உரிமையுள்ளவற்றிற்கு அப்பாலாக ஏதாவது ஒரு ஊக்குவிப்பைக் கோருவதாகும்."

சட்டத்தின்படி தான் கடமைப்பட்டுள்ளதற்கு அல்லாது தனது சொந்த நலனுக்காக அதிகாரத்தை மக்கள் துஷ்பிரயோகம் செய்யும் போது ஊழல் இடம்பெறுகின்றது.

- அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் இழப்பை ஏற்படுத்தி அரச அலுவலகத்தை தனிப்பட்ட நன்மைக்காக உபயோகித்தல்
- அதிகாரம் பெற்றுள்ளவரால் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படல்
- தனிப்பட்ட நன்மை கருதி சட்டபூர்வமற்றவைகளைச் செய்ய விரும்புவது
- ஊக்குவிப்புகளுக்கு அடிமைப்பட்டு தவறானவைகளைச் செய்ய முற்படல்
- தனது கடமையைச் செய்வதற்காக சன்மானம் எதிர்பார்த்தல்
- ஏனையவர்களின் உரிமை மற்றும், சட்டத்தினை மீறும் நடத்தைகள்

**பாரிய மற்றும் சிறிய ஊழல்**

பாரிய ஊழல் ஆனது ஒரு தேசிய அரசாங்கத்தின் உயர் மட்டத்தினுள் ஊடுருவிப் பரவுகின்றது. இது நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையில் உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கின்றது.

[1] Transparency International Plain Language Guide – 2009, Pg.14

சிறிய ஊழல் ஆனது முன்னுரிமைச் சலுகையை எதிர்பார்ப்பவர்களினால் அல்லது சிறுபதவிகளில் உள்ள ஊழியர்களினது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மூலம் சிறிய தொகைப் பணப் பரிமாற்றத்தை ஏற்படுத்தும்.

பாரிய ஊழல் மற்றும் சிறிய ஊழல்களுக்கிடையே உள்ள மிகக் கடுமையான வித்தியாசம், பாரிய ஊழல்கள், அரசாங்கத்தின் பிரதான செயற்பாடுகளில் திரிவுபடுத்தலை அல்லது ஊழலை ஏற்படுத்தும் அதே நேரம் சிறிய ஊழல்கள் ஆட்சிக் கட்டமைப்பினுள் மற்றும் சமூக அமைப்பினுள் நிலை நிண்டு வளரும்.

**உயிரோட்ட மற்றும் செயற்பாட்டு ஊழல்**

உயிரோட்ட ஊழல் என்பது வழக்கமாக இலஞ்சம் வழங்குவதை அல்லது கொடுக்க முன்வருதலைக் குறிக்கும. "செயற்பாட்டு" இலஞ்சம் என்பது இலஞ்சத்தை பெற்றுக் கொள்வதனைக் குறிக்கும்.

**இலஞ்சம்**

யாதேனும் ஒரு காரியத்தைச் செய்வதற்கு அல்லது யாதேனும் ஒரு தீர்மானத்தை மேற்கொள்வதற்கு முறைகேடான விதத்தில் செல்வாக்கைப் பிரயோகிப்பதற்காக யாதேனும் ஒரு நன்மையை (சந்தோஷத்தை) வழங்குதல், வழங்குவதற்கு வாக்குறுதி அளித்தல் அல்லது வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்தல் இலஞ்சமாகும்.[2]

இலஞ்சம் அநேகமாக மிகவும் பொதுவான ஊழல் ஆகும். அதன் "நன்மை" எந்தவொரு ஊக்குவிப்பாகவும் இருக்க முடியும். பணம் அல்லது பெறுமதிகள், கம்பனி பங்குகள், உள்ளக தகவல்கள், நீடித்து நிலவுகின்ற அல்லது ஏனைய உதவிகள், மகிழ்விப்பு, தொழில்வாய்ப்பு அல்லது ஊக்குவிப்புக்கான பொருத்தங்களுமாகும்.

**வஞ்சகம் மற்றும் மோசடி**[3]

வஞ்சகம் மற்றும் மோசடி, தனக்கு உரிமை இல்லாத ஒருவர் தனது பதவி அல்லது தொழில் மூலம் பணம், சொத்து அல்லது பெறுமதி வாய்ந்த பொருட்களை பெற்றுக் கொள்வதனைக் குறிக்கும்.

மோசடி, எவ்வாறாயினும் பிழையான அல்லது தவறான தகவல்களை பயன்படுத்தி ஒரு பொருளின் உரிமையாளர்; அதனை நன்கொடையாக விடுவிக்கச் செய்வதனை உள்ளடக்கும்.

---

[2] Transparency International Plain Language Guide – 2009, Pg. 5

[3] Source: United Nations Office on Drugs and Crime, The Global Program Against Corruption, UN Anti-Corruption Tool Kit, Third Edition, Vienna, September 2004

**கட்டாய வசூல்**

ஒத்துழைப்பைப் பெறும் பொருட்டு கட்டாயப்படுத்துவதில் தங்கியுள்ளது. அவையாவன, வன்முறை அச்சுறுத்தல் அல்லது ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் முகமாக பாதிப்பு ஏற்படக் கூடிய தகவல்களை வெளிப்படுத்தல் போன்றவகைளாகும். ஏனைய வகையிலான ஊழல்களைப் போன்று "பாதிக்கப்பட்டவர்" பொது ஆர்வம் கொண்டவராக அல்லது ஊழல் நடவடிக்கை அல்லது தீர்மானத்தினால் பாதகமாகப் பாதிக்கப்பட்ட தனிநபர்களாகவும் இருக்கலாம்.

**உசிதப்படி செய்யும் உரிமையை துஷ்பிரயோகம் செய்தல்**

இது ஒரு தனிநபர் மீது அளிக்கப்பட்டுள்ள உசிதப்படி செய்யும் உரிமையை தனிப்பட்ட நன்மை கருதி துஷ்பிரயோகம் செய்வதாகும். ஊதாரணமாக அரசாங்கம் ஒப்பந்தம் ஒன்றை கையாலும் அலுவலர் தன் உசிதத் தன்மையைப் பயன்படுத்தி தனக்கு அக்கறையுள்ள நிறுவனத்திடம் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெறுவார். மற்றும் தனது சொந்த ஆதனத்தின் பெறுமதியினை உயர்த்தும் சிபாரிசுகளையே பரிந்துரைப்பார்.

**பாராபட்சம், உறவினர்களுக்கும் தனிச்சலுகை, வாடிக்கைக் குழு**

இவ்வாறான துஷ்பிரயோகங்கள் ஒரு நபருக்கு அவர் மூலகமாகவுள்ள குடும்ப உறுப்பினர் ஒருவர், அரசியல் கட்சி, குலம், மதம் அல்லது ஏனைய குழுக்களுடனான தொடர்பு மூலமாகவே அன்றி அவரது தனிப்பட்ட ஆர்வத்தினால் ஆளப்படுவதில்லை.

மூலாதாரம் : போதைவஸ்து மற்றும் குற்றவியல்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம், ஊழலுக்கு எதிரான உலகலாவிய வேலைத்திட்டம், ஐ.நா.வின் ஊழல் எதிர்ப்புக் கருவிகள், மூன்றாம் பதிப்பு, வியன்னா, செப்டம்பர் 2004)

**நேர்மைத் திறன் கொண்ட தேசமொன்றைக் கட்டியெழுப்புதல்**

நாடு பூராகவுள்ள மக்கள் சமூகம் அமைதி, ஜனநாயகம் நீதி மற்றும் ஒன்றிணைத்தல் கொண்டதாய் உள்ளதனை விரும்புகின்றனர். சுதந்திர இலங்கையில் இவ்வாறான ஒரு சமூகத்தை உருவாக்குவது சம்பந்தமாக பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. தேசத்தைக் கட்டியெழுப்பும் சகலராலும் விவசாயம், கல்வி, கைத்தொழில், சுகாதார பராமரிப்பு மற்றும் சமூக உட்கட்டமைப்புக்களை விரிவாக்குவதில் முன்னோடி முயற்சிகளை மேற்கொண்டு சர்வதேச சமூகத்தில் மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினராக வருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. உறுப்பினராக வருவதில் இதில் ஈடுபட்ட சகலரும் முயற்சிகளை மேற்கொண்டனர். 1940 மற்றும் 50 களில் சகல சுதந்திர நாடுகளிலும் இவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இது விடயத்தில் இலங்கை பெருமைப்படக்கூடிய விடயங்களை நிறைவேற்றியுள்ளது. சர்வஜன வாக்குரிமை, பாலர் கல்விக்கான அடைவழி, சகல பிரஜைகளுக்கும் இலவசக் கல்வி, வயது வந்தோர் எழுத்தறிவு, பிறப்பு/இறப்பு/விவாகப் பதிவு, வைத்திய மேற்பார்வையின் கீழ் இடம்பெறும் மகப்பேறு மற்றும் சுகாதார பராமரிப்பு, பயன்தரும் தபால் சேவை, அரசாங்க சேவைகள் வழங்கும் முறை மற்றும் பல அரசாங்க அதிகாரிகளினால் சகல கிராமங்களும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுதல் போன்றன சில விடயங்களாகும். எவ்வாறாயினும் இடைக்கிடையே ஏற்படும் சமூக எழுச்சி இன-அரசியல் முரண்பாடு, இளைஞர் கொந்தளிப்பு மற்றும் தொழில் இன்மைப் போக்கு மற்றும் வன்முறை மற்றும் ஊழல் ஆகியன பயனுள்ள வகையில் உரையாடப்படாத, ஆழமாகப் பதியப்பட்ட காரணிகளாகும்.

யுத்தத்தின் பின்பான அபிவிருத்தி சாத்தியங்கள் மற்றும் நாடுபூரகாவுமுள்ள மக்களின் புதுமையான தொழில் துணிவுள்ள சக்தியைக் கட்டவிழ்த்துவிடுவதற்கான சூழலை அமைக்க உதவக்கூடிய ஆட்சித்துறையின் தரத்தை விருத்தி செய்ய ஓர் புதிய சக்தியும் திடசங்கற்பமும் இலங்கைக்குத் தேவையாயுள்ளது.

திறமை, நீதி மற்றும் நியாயமான நடவடிக்கைகள் நிலைத்திருக்கும், ஊழல் அற்ற சூழலில் மாத்திரமே அவ்வாறான ஓர் சுற்றாடல் அமையக் கூடும்.

இலங்கையின் வரலாறு நல்லாட்சி மற்றும் மோசமான ஆட்சிபற்றிய அனுபவங்களுடன் பிரகாசிக்கின்றது. பொருளாதார பலவீனத்தை இல்லாமலாக்குதல், அதிருப்தி, தவறான எண்ணம் கொள்ளல் மற்றும் வன்முறை, முரண்பாடு ஆகியவற்றிற்கான மூலகாரணங்களை இல்லாது ஒழித்தல், சகல நன்மைகளும் நியாயமான முறையில் கிடைக்கக் கூடியவகையில் நம்பிக்கையை வலிமைப் படுத்தல், மற்றும் அபிவிருத்தியை ஏற்படச் செய்யும் வகையில் உயர்மட்ட நீதி நெறி மற்றும் துறைசார் நடவடிக்கைகளில் நம்பிக்கை ஏற்படும் வகையில் அபிவிருத்தியை ஏற்புடையதாக்கல் ஆகியவை மூலம் நேர்மைத் திறன் கொண்ட தேசம் ஒன்றைக் கட்டியெழுப்புவது சம்பந்தமாக பலவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

**ஊழல் எதிர்ப்பை ஏன் விருத்தி செய்ய வேண்டும்.?**

ஊழல் ஒரு நாட்டின் செல்வம் மற்றும் வளங்களைக் கொள்ளையிடுகின்றது. அது நியாயமுறை மற்றும் நீதியைத் தடுக்கின்றது. இது செல்வாக்குச் செலுத்தக் கூடிய தனிநபர்கள் தமது அதிகாரம் சொத்துக்கள் மூலம் ஏனையவர்களைத் தங்களுக்குச் சார்பாக இயக்க வைக்கும், அமுலில் உள்ள சட்டங்கள் நீதிநெறி மற்றும் சமூக நீதியின் அடிப்படைத் தரங்கள் ஆகியவைகளை மீறச் செய்யும். மேலும் ஊழல் புகழுக்குரிய இராச்சியத்தை பலவீனப்படுத்துகின்றது. அத்தோடு ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தை அழித்து விடுகின்றது.[4]

**நேர்மைத் திறனை வலிமைப்படுத்துவதில் உள்ள தற்காலச் சவால்கள்.**

ஊழல் நடத்தைகளில் மிகவும் பாதகமான சிக்கல்கள் உள்ளன. அதனை அடையாளம் கண்டு இல்லாது ஒழிக்காவிட்டால் அது பரந்து விரிந்து சமூக பொருளாதார கொடுக்கல் வாங்கல்களைக் கட்டுப்படுத்தக் கூடிய தரம் கொண்டதாக அமையும். இது நீதி நியாயம் மற்றும் வெளிப்படைத் தன்மை அடிப்படையில் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட அடிப்படைக்கு மாறானதாகும். நம்பிக்கை மற்றும் நியாய அடிப்படையில் இருக்க வேண்டிய கொடுக்கல் வாங்கல்களை, நீதி, பொருளாதார அல்லது ஏனைய செல்வாக்கு, மற்றும் அதிகாரமுள்ளவர்களுக்கு அனுகூலமான முறையில் நிலைமையை மாற்றியமைக்கும்.

கண்டிப்பாக அமுல்படுத்தப்படும் பயன்தரு சட்ட ஒழுங்கு விதிகள் பற்றிய உரிய புரிந்துணர்வு இல்லாத பட்சத்தில் ஊழல் வளர்ந்து சகல பொது நிறுவனங்கள் மீதும் மக்களுக்கு உள்ள நம்பிக்கையை இல்லாது அழித்துவிடும். பரந்தளவிலான பாரிய ஊழல்கள், மக்கள் பல

[4] The National Integrity Systems study (2011)

இலட்சம் ரூபா பெறுமதியான நிதி, வளங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை இழக்கச் செய்யும். இது மற்றையபடி சகல மக்களினதும் நன்மை கருதி உபயோகிக்க முடியும்.

**ஐக்கிய நாடுகளின் ஊழல் எதிர்ப்புதினம்**

ஊழலின் பரந்த மற்றும் அழிவை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை அடையாளம் கண்ட ஐக்கிய நாடுகள், ஊழலுக்கு எதிரான சாசனம் ஒன்றை வகுத்தது இது பொதுச் சபையினால் 2003 ஒக்டோபர் 31ஆம் திகதி ஏற்றுக் கொள்ளப்பட்டது. 2004 மார்ச்சு 31ஆம் திகதி இதனை ஏற்று இலங்கை அரசாங்கம் இதில் கைச்சாத்திட்டதுடன் இலங்கை இதனை ஏற்றுக் கொண்ட இரண்டாவது நாடாகும்.[5]

"ஊழல் பற்றி அறிவூட்டும் மற்றும் அதற்கு எதிராக போராடி அதனைத் தடுப்பதில் ஐ.நா. சாசனத்தின் பங்களிப்பு"[6] அறிவூட்டும் நோக்கில் ஐக்கிய நாடுகள் டிசம்பர் 09ஆம் திகதியை ஐ.நா. ஊழல் எதிர்ப்பு தினமாக பிரகடனப்படுத்தியது. இந்நாளில் ஒழுங்கு செய்யப்படும் நிகழ்வுகள் ஊழலுக்கு எதிராகப் போராடுவதற்காகவும் பொதுமக்களை அறிவூட்டுவதற்காகவும் எடுக்கும் முயற்சிகளாகும். ஊழலை ஒழிக்கும் முயற்சியினை வலிமைப்படுத்தும் முகமாக ஐ.நா., அங்கத்துவ நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவிமற்றும் அறிவூட்டல்கள் மூலம் ஒத்துழைப்பு வழங்குகின்றது.

**தேசிய நேர்மைத்திறன் விருதுகள்**

பொது விவகாரங்களில் விசேடமான நேர்மைத்திறனை வெளிக்காட்டும் தனிநபர்(கள்) மற்றும் நிறுவனங்களுக்கு ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டநெஷனல் இலங்கை நிறுவனம் தேசிய நேர்மைத் திறன் விருது (தேநேவி) வழங்குகின்றது. ஊழலை இல்லாது ஒழிப்பதற்கு, நல்லாட்சியை ஏற்படுத்துவதற்கு மற்றும் நேர்மைத் திறன் கொண்ட நாடென்றினைக் கட்டியெழுப்புவதற்கென அமைதியாகவும் கடின உழைப்புடன் புகழ்பெறாத வீரர்களை இது அங்கீகரிக்கின்றது.

எந்தத் துறையிலாவது ஊழலுக்கு எதிரான நேர்மைத் திறனுக்காக விசேட துணிவு காட்டியுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பற்றி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தனிநபர்களும் நிறுவனங்களும் வேண்டப்படுகின்றன.

2004 ஆம் ஆண்டில் அதன் ஆரம்பம் முதல் உற்சாகம் மிக்க 10 தனிநபர்களும் 5 விசேட பாராட்டுதல் அபேட்சகர்களும் விருதுகளை வென்றனர். இந்த வெற்றியாளர்களுள் உயர் அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் தொழில்வாதிகள் மற்றும் நடவடிக்கையாளர்களும் உள்ளடங்குகின்றன.

---

[5] http://treaties.un.org/Pages/ViewDetails.aspx?src=IND&mtdsg_no=XVIII-14&chapter=18&lang=en

[6] http://www.un.org/en/events/anticorruptionday/index.shtml

ஒவ்வொரு வருடமும் ட்இஹ்ரீல நிறுவனம் தேசிய மட்டத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய தமது துறையில் நேர்மைத் திறனை வெளிக்காட்டியுள்ள முக்கிய நபர்களை உள்ளடக்கி சுயாதீன விருது வழங்கும் குழுவை நியமிக்கின்றது. விண்ணப்பக் கோவை, மற்றும் அதன் பிற்பாடான விசாரணைகள், மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சிகளையும் அடிப்படையாகக் கொண்டு இக்குழு வெற்றியாளர்களை தெரிவு செய்கின்றது.

எவ்வாறாயினும் தேநேவி ஒரு நாளைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கையல்ல. இது ஒரு வருடம் பூராகத் தொடர்ச்சியாகச் செல்லக் கூடிய செயற்பாடாகும். வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்கு ஆறு மாதங்கள் பயன் படுத்தப்படுவதோடு, வெற்றியாளர்கள் பொது மன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு நேர்மைத் திறன் பற்றி பலவித விளைவுகளை உருவாக்கும் பொருட்டு அவர்களின் கதைகளைப் பகிர்ந்து கொள்ள மீதி ஒரு மாதமும் பயன்படுத்தப்படும்.

## <u>தேநேவி செயற்பாடு</u>

தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கும் குழு
மற்றும் ஆலோசனைக் குழு

↓

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரல்

↓

விண்ணப்பிப்பதற்கான இறுதித் தினம்

↓

விண்ணப்பங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல்

↓

விருது வழங்குதல்

↓

வெற்றி பெற்றவர்கள் பற்றி அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்தல்

↓

தேநேவி மூலம் மாற்றம் ஏற்படுவதற்கு ஆதரவாய்ப் பேசுவோம்

↓

நேர்மைத்திறன் வீரர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட துறைகளில் ட்இஸ்ரீலவின் வேலைத்திட்டங்கள்

**யோக்கியத் தன்மை / தகைமை**

இலங்கையில் ஊழலை எதிர்த்து அதன் தாக்கத்தை குறைப்பதற்கு அல்லது ஊழலை இல்லாது ஒழிப்பதற்கு குறிப்பிடத்தக்க அளவில் நடவடிக்கை எடுத்துள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் விருது பெறத் தகுதியுள்ளவர்களாவர்கள். இவை முன்னோடியானதாகவும், புதுமையானதாகவும், துணிவுள்ளதாகவும் இருக்க வேண்டியதோடு உள்ளுர் அல்லது சர்வதேச மட்டத்தில் முன்மாதிரியாக அல்லது சிறந்த பழக்கமாக உபயோகிக்க முடியுமானதாக அல்லது உபயோகித்து இருக்க வேண்டும்.

தனிநபர்கள் அல்லது நிறுனங்களால் ஊழலைத் தவிர்க்க உருவாக்கப்பட்ட அறிமுகப்படுத்தப்பட்ட அல்லது அமுல்படுத்தப்பட்ட பொறிமுறைகளும் பாராட்டினைப் பெறுவதற்காக கருத்திற் கொள்ளப்படும்.

ஒவ்வொருவரும் இயங்கும் இடத்தைப் பொருட்டு ஊழலுக்கு எதிராகப் போராட தனிநபர்களும் நிறுவனங்களும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வேறுபடலாம். ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம், செல்வாக்குள்ள வித்தியாசமான தம் அதிகார எல்லைக்குள் நேர்மைத் திறன் நடவடிக்கைகளை அடையாளம் கண்டு பாராட்டுவதற்கு, அரசாங்க அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், துறைசார்ந்தோர், சமூக சேவகர்கள்,

கல்விமான்கள், தொழிற் சங்கத்தினர் மற்றும் மகளிர் மற்றும் இளைஞர் குழுக்கள் ஆகிய ஊழல் எதிர் நடவடிக்கைகளில் உயிரோட்டமாய் ஈடுபட்டுள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்களைப் பிரேரிக்குமாறு பிரஜைகளை உற்சாகப் படுத்துகின்றது.

மரணத்தின் பின்பான விண்ணப்பங்களும் தெரிவு செய்வதற்காக கவனத்திற் கொள்ளப்படும்.

ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தை தேநேவி இற்காக மூன்று முறை வரை பிரேரிக்கலாம். மூன்று தடவைகளுக்கு மேற்பட்ட பிரேரணைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| தேநேவி தனிநபர் | தேநேவி நிறுவனம் |
|---|---|

**சிரேஷ்டமான ஊழல் எதிர்ப்பு முயற்சிகள்**

மகளிர், இளைஞர், அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், அரசியல்வாதிகள், துறை சார்ந்தோர், நடவடிக்கையாளர்கள், மத குருக்கள், போன்று வெவ்வேறுபட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்கள் தம்முடைய கடமை மற்றும் சமூக வாழ்க்கை எல்லைக்குள் நியாயம், மற்றும் நீதி முறையை உறுதிப்படுத்தும் முகமாக அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் நேர்மைத் திறனை வலிமைப்படுத்தல் மற்றும் ஊழலை அழிக்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

மேற்கொள்ளப்பட்ட ஊழல் - எதிர்ப்பு முயற்சிகளின் தாக்கத்தின் முக்கியத்துவம்

- இம்முயற்சி நடவடிக்கையின் தாக்கத்தின் செல்வாக்கு தனிப்பட்ட அந்தஸ்தைத் தாண்டி கீழ்வருபவற்றிற்கு நீண்டு சென்றிருக்கலாம்.
  - அ) நிறுவனம்
  - ஆ) உள்ளூர் சமூகம்
  - இ) தேசம்
  - ஈ) சர்வதேச அரங்கு
- எதிர்காலத்தில் ஊழலைத் தடுப்பதற்கான முன்மாதிரிகளை உருவாக்குதல்

- பதவிநிலை வகிக்கும் ஒரு நபரைத் தோற்கடித்த உறுதியானதாகவும் கடினமானதாகவும் தோன்றிய தவிர்க்க முடியாத சவால்களின் விஸ்தீரணம்.
- தனிப்பட்ட , பொருளாதார, பௌதீக, சமூக, உத்தியோக அல்லது நிறுவனங்கள் சாதகமான தாக்கத்தை அடைய மேற்கொண்ட தியாகத்தின் அளவு
- ஊழல் எதிர்ப்பு வேலை முயற்சிகளை பின்பற்றத்தக்க நற்பழக்கங்களை உபயோகிக்கும் இயலுமை
- ஊழல் எதிர்ப்பு குறுக்கிடுதல்களில் ஈடுபடுவதற்கான நெம்புகோலாக தாம் வகிக்கும் பதவி உத்தியோகம் வழங்கிய சந்தர்ப்பத்தின் விஸ்தீரணம்
- முயற்சி தனிப்பட்டதாக, குழுவாக அல்லது நிறுவனத்துடனானதாக இருக்க முடியும்.
- ஊழலுக்கும் எதிராகப் போராட பாவனையில் உள்ள திட்ட வரம்பு ஒன்றின் பயனுள்ள முயற்சி அல்லது ஓர் புதுமையான முயற்சியாக இருக்க முடியும்.

**ஊழல் எதிர்ப்பு முயற்சிக்குத் தகுதிபெறாத பெறுமதிமிக்க முயற்சி**

- சமூக வேலை
- தொண்டர் சேவை
- மத விவாகரங்களில் ஈடுபடல்
- முறையான தொழில்சார் வேலைகள்

**விருது பெற யோக்கியதை அற்றோர்**

- தனிப்பட்டவர்கள் அல்லது நிறுவனங்களினது ட்இஸ்ரீல நிறுவனக் கொள்கை மற்றும் விழுமியங்களுடன் முரண்பட்ட மெய்ப்பிக்கப்பட்ட நடத்தைகள்.
- ட்இஸ்ரீல நிறுவன பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், விருது வழங்கும் குழு மற்றும் ட்இஸ்ரீல வில் சம்பளம் பெறும் பணியாளர்கள்.
- விருது குழு உறுப்பினர்கள்
- சம்பந்தப்பட்ட வருடத்தினுள் ட்இஸ்ரீல வில் வேலை செய்கின்ற அல்லது வேலை செய்திருந்த எந்தவொரு நபர் ((ட்இஸ்ரீல்) கடந்தகால அல்லது தற்போதைய ஈடுபாடுகள் ஒரு தனிநபர் விருது பெறக் கவனத்தில் கொள்ளப்படத் தடையாக இருக்காது)

**எவ்வாறு பிரேரிப்பது**

ஒன்றாய் வேலை செய்வோர், வேலைபார்ப்போர், முகாமையாளர்கள், சம்பந்தப்பட்ட நபர்கள் (மூன்றாம் நிலை) நபர்கள், குழுக்கள் அல்லது நிறுவனங்களைத் தேநேவி இற்காக விருது வழங்கும் கமிட்டிக்கு முன் மொழியலாம். முன் மொழிவோர் சம்பந்தப்பட்ட தகவல்கள் உள்ளடங்கிய கோவை ஒன்றைச் சம்பந்தப்பட்ட நபர்(களின்)இணக்கத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

சுயமாக முன்வைக்கப்படும் பிரேரணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**பிரேரணைக் கோவை**

பிரேரணைக் கோவை உரியமுறையில் நிறைவு செய்யப்பட்ட ஆவணங்களை கீழ்வரும் ஒழுங்கமைப்பில் உள்ளடக்கி இருத்தல் வேண்டும். இக்கோவையானது கொடுக்கப்பட்ட காலக்கெடு முடியுமுன் ட்இஃரீல விடம் சமர்பிக்கப்பட வேண்டும். சுரிவர பூர்த்தி செய்யப்படாத கோவைகள் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

I. நியமனக் கடிதம் நியமனத்தை மேற்கொள்ளும் நபரினால் ஒப்பமிடப்பட வேண்டும்.
II. அபேட்சகரின், நிறுவனத்தின் சுயசரிதை அல்லது வரலாற்று விபரம்
III. நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரரினால் ஒப்பமிடப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட மேற்கோள் குறிப்பு (இணைப்பு A)
IV. விண்ணப்பதாரியினால் உரிய முறையில் ஒப்பமிடப்பட்ட இணக்கக் கடிதம் இறந்தவர்களினது விண்ணப்பங்களின் போது அவரது கிட்டிய குடும்ப உறுப்பினரது இணக்கம் தேவை. கிட்டிய குடும்பம் இல்லாதபோது நீடித்த குடும்ப உறுப்பினர் ஒருவரினது இணக்கம் தேவை (இணைப்பு B )
V. விண்ணப்பதாரியினால் ஒப்பமிடப்பட்ட நேர்மைத் திறன் உறுதி மொழி (இணைப்பு C)
VI. உறவினர்கள் அல்லாத இரண்டு சிபாரிசாளர்களினது பெயர், தொடர்பு கொள்ளும் தகவல்கள்.

விருப்புக்குரிய விபரங்கள் ஆவணங்கள்

VII. பத்திரிகை தாள்கள்
VIII. மேலதிக பின்னணி ஆவணங்கள்
IX. வானொலி, தொலைக்காட்சி நேர்காணல்களின் பதிவுகள்
X. விண்ணப்பத்திற்கு ஆதாரம் காட்டக் கூடிய ஏனைய ஆவணங்கள்

விண்ணப்பப் பத்திரத்தை நிரப்புவதற்காக நபர் ஒருவர் ட்இஃரீல வின் உதவியை நாடலாம் அல்லது விண்ணப்பம் பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்ளலாம். www.tisrilanka.org இணையத்திலும் தகவல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

**<u>வெற்றியாளர்கள் பற்றிய அறிவிப்பு</u>**

வெற்றியாளர்கள் பற்றிய அறிவித்தல் ஒக்டோபர் மாதம் இறுதியில் தேசிய நேர்மைத்திறன் விருது வழங்கும் குழு அதன் இறுதித் தீர்மானத்தை அறிவிக்கும்.

ஏதாவது மீளப்பெறல் உற்பட பெறுபேறுகள் ஐ.நா. ஊழல் எதிர்ப்பு தினமான டிசம்பர் 9ஆந் திகதி தேசிய நேர்மைத் திறன் வைபவத்தின் போது அறிவிக்கப்படும்.

**பரிசு**

உலகலாவிய ஊழல் எதிர்ப்பு இயக்கத் தலைவரினால் கருத்துக் குறிப்பிடப்பட்ட சான்றிதழ் மற்றும் கிண்ணம் ஒன்றும் தேசியத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்ளும் டிசம்பர் 9ஆந் திகதி இடம் பெறும் வைபவத்தின் போது விருது பெற்றோருக்கு வழங்கப்படும்.

விசேட ஊடக அறிக்கை மற்றும் பிரசாரம் வழங்கப்பட்டு இம்முயற்சிகள் மற்றும் அடைவுகள் பற்றி தேசிய மற்றும் உலகலாவிய ரீதியில் அறிவூட்டல் இடம்பெறும்.

உசிதம் எனக் கருதும் பட்சத்தில் வெற்றியாளர்கள் உலகலாவிய ஊழல் எதிர்ப்பு விருது பெற ட்இ�,றீல வினால் முன் மொழியப்படும்.

**விண்ணப்பம் கோரல்**

தேநேவி பற்றி இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் விளம்பரம் செய்யப்படும். அத்தோடு விண்ணப்பக்கங்கள் ஆகஸ்ட் 31ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பம் கோரல் www.tisrilanka.org இணையத்திலும் அறிவிக்கப்படும்

**தேசிய நேர்மைத் திறன் விருது வழங்கும் குழு**

சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் நேர்மைத்திறனை வெளிக்காட்டியுள்ள மூன்றுக்குக் குறையா உயர்வான நபர்களை நடுவர்களாகக் கொண்ட விருது வழங்கும் குழு ஒன்று ட்இஹ்றீல நிறுவனத்தினால் நியமிக்கப்பட்டு விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும்.

விருது வழங்கும் குழு தெரிவு செயற்பாட்டில் நேர்மைத் திறனை உயர்வாக முகாமைத்துவம் செய்வதோடு கீழ்வருவனவற்றை அமுல்படுத்தும்.

1. விருது வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோருவதற்கு முன் நடப்பில் உள்ள வழிகாட்டல்களை வருடாந்தம் மீள்பார்வை செய்வது நவீனமயப்படுத்தும்.
    - நடப்பில் அமுலில் உள்ள வழிகாட்டல்களைப் பின்பற்றுவதோடு மதிப்பீட்டிற்காக செயற்பாடுகளையும் தீர்மானிக்கும்.
    - குறிப்பிட்ட விண்ணப்பங்கள் சம்பந்தமாக முன் மொழிந்தவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
    - தேவைப்படுமிடத்து மேலதிக விபரங்களைக் கோரல்

- போதிய தகவல் வழங்கப்பட்டிராத விண்ணப்பங்களை கருத்திற் கொள்ளாமலிருத்தல்
- தேவைப்படுமிடத்து விண்ணப்பாதாரியின் நிறுவனத்திற்கு விஜயம் செய்தல் பிரதேசத்திற்கு விஜயம் செய்து வழங்கப்பட்ட தகவல்களை ஊர்ஜிதம் செய்தல் அல்லது தேவையான மேலதிக தகவல்கள், சாட்சியங்களைத் திரட்டல்
- பட்டியல் படுத்திய அபேட்சகர்கள் பற்றி அறிக்கையிடல்
- விருது வழங்குவதற்காக (இரு நபர்கள் நிறுவனங்கள் வரை) மிகவும் பொருத்தமான அபேட்சகரைத் தெரிவு செய்வதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்தல்
- விண்ணபங்கள் தேவையான தரத்தினை உடையதாக இல்லாவிட்டால் விருது வழங்குவதனைத் தவிர்த்தல்
- தேநேவி வழங்குவதற்கு மேலதிகமாக, விசேட பாராட்டுதலுக்காக விண்ணப்பங்களை சிபாரிசு செய்தல்
- ட்இஸ்ரீல நிறுவனம் மற்றும் நேர்மைத் திறன் வேலைத் திட்டத்தைப் பாதுகாக்கும் பொருட்டு தேவைப்படுமிடத்து விருதினை வாபஸ்பெறல்
- எதிர்கால குழுவொன்று அதனை வாபஸ் பெறத்தீர்மானித்தாலன்றி நடுவர்கள் குழாமின் முடிவு இறுதியானதாகும்.

**விருது ஒன்றினை வாபஸ் பெறல்**

கீழ்வரும் காரணங்களையிட்டு ஓர் விருது வழங்கும் குழு ஏற்கனவே வழங்கிய விருதினை வாபஸ் பெறலாம்.

- விருது வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட தகவல்களை மூடி மறைத்ததன் மூலம் வெற்றியாளர் தகைமையைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்பது கண்டறியப்பட்டால்.
- வெற்றியாளரின் நடத்தை ட்இஸ்ரீலவிற்கு அசௌகரியத்தை ஏற்படுத்துமாயின்

எவ்வாறாயினும் இது விடயமாக தீர்மானிப்பதில் விருது வழங்கும் கமிட்டி தேவையான சகல தகவல்களையும் திரட்டும். மேலும் அவ்வாறான தீர்மானத்திற்கு வருமுன் சம்பந்தப்பட்ட வெற்றியாளரின் கருத்துக்குச் செவிமடுக்கும். முன்னைய விருது ஒன்றினை வாபஸ் பெறுவது சம்பந்தமாக கவனத்தில் எடுக்கும் சகல சந்தர்ப்பங்களிலும் ட்இஸ்ரீல வின் நிறைவேற்றுப் பணிப்பாளர், விருது வழங்கும் குழுவுக்கு அவ்வாறான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டப்படுவார். விருது வழங்கும் குழு அதன் தீர்மானத்திற்கான போதியளவு காரணங்களை வழங்கும்.

எவ்வாறாயினும், வாபஸ் பெறுவதற்கான வேண்டுகோள்களை ஏற்றுக் கொள்வது, முடிவு எடுத்தல் மற்றும் நிராகரிப்பதற்கான செயற்பாடுபற்றி இறுதி உசித உரிமை விருது வழங்கும் குழுவுக்கே உள்ளது.

## தெரிவு செய்யும் செயற்பாடு

**மே**

தேநேவி வழிகாட்டல்களை மீளாய்வு மற்றும் நேர்த்தியாக்க இயலும்

↓

**மே**

தேசிய நேர்மைத் திறன் குழு நியமித்தல்

↓

**ஜுன்**

விருது வழங்கும் குழ் முதல் கூட்டம்

↓

**ஜுன்**

விண்ணப்பம் கோரல் →

**ஆகஸ்ட்**

விண்ணப்பம் பெற்றுக் கொள்ளும் கடைசித் திகதி

**ஒக்டோபர்**

பட்டியல் படுத்தப்பட்ட அபேட்சகர்கள் பற்றிய புலனாய்வு

↓

**ஒக்டோபர்**

விருது குழுவினால் விண்ணப்பதாரர்களை மதிப்பீடு செய்தல்

↓

**ஒக்டோபர்**

ட்இஹ்ரீல வினால் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்தல்

↓

**ஒக்டோபர் இறுதி**

தேநேவி மற்றும் விசேட பாராட்டுக்குரிய அபேட்சகர்(கள்) (வெற்றியாளர்களைத் தெரிவு செய்தல்)

↓

**டிசம்பர்**

தேசிய நேர்மைத் திறன் விருது வழங்கல்

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பக் கோவை தபால்/ஈமேல் மூலம் பின்வரும் விலாசத்திற்கு ஆகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடிய வகையில் ட்இஹ்ரீல நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விலாசம் : தேசிய நேர்மைத்திறன் விருதுகள் 2014

ட்ரான்ஸ்பெரன்ஸி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா

இல. 183/5, ஹைலெவல் றோட், கொழும்பு - 06

அழையுங்கள் : 0114369781 பெக்ஸ் : 011 2514588

ஈ-மேல் : nia@tisrilanka,org

விண்ணப்பத்திற்கான இறுதித் திகதி ஆகஸ்ட் 31, 2014

**பின்னிணைப்பு A விண்ணப்பகோவை**

இது விண்ணப்பிக்கும் நபர்களால் பூர்த்தி செய்யப்பட்டு கேட்கப்பட்ட மற்றைய தகவல்களுடன் அனுப்பப்பட வேண்டும்

| | |
|---|---|
| **அபேட்சக நபர் அல்லது நிறுவனத்தின் முழுப்பெயர்** | |
| **நபர் ஆயின், வண./திரு. /திருமதி. / செல்வி. /கலாநிதி. / பேராசிரியர்** | |
| **நிறுவனமாயின் நிறுவனத் தலைவரின் பெயர்** | |
| | **விண்ணப்பத்தை மேற்கொள்ளும் நபர் அல்லது நபர்கள்** |
| **நபர் 1ன் பெயர்**<br>**முவகவரி**<br>**தொடர்பு இலக்கம்**<br>**மின்னஞ்சல்** | |
| **நபர் 2ன் பெயர்**<br>**முவகவரி**<br>**தொடர்பு இலக்கம்**<br>**மின்னஞ்சல்** | |
| **தகுதியுரை (500 சொற்கள்)**<br>இந்த அபேட்சகர் ஏன் தேநேவி னைப் பெற வேண்டும் என்பதனை விபரமாக விளக்கவும்<br>(பின்னிணைப்பு E இனைப் பார்க்கவும்) | |
| | **அபேட்சகரால் பெறப்பட்ட முன் விண்ணப்பங்கள் அல்லது தேசிய விருதுகள் பற்றிக் குறிப்பிடவும்.** |
| விருதின் பெயர் | |
| வருடம் | |
| விருது வழங்கிய நிறுவனம் | |
| | **வெளிப்படுத்தல்கள்** |
| **அபேட்சகர் நிறுவன்த்தின் நேர்மைத் திறனுக்கு தொடர்பு பட்ட ஏதேனும் குற்றவியல் நடவடிக்கைக்கோ, சட்டக் குற்றத்திற்கோ குற்றவாளியாகக் காணப்படவில்லைல** | விண்ணப்பதாரியின் பெயர்(1)<br>ஒப்பம்<br>திகதி<br><br>விண்ணப்பதாரியின் பெயர்(2)<br>ஒப்பம்<br>திகதி |

| | |
|---|---|
| **ஏதேனும் ஒழுக்க நடவடிக்கை அல்லது குற்றவியல் (குடியியல் அல்ல) நடவடிக்கை தொடர்பான அபேட்சகர் மீதான நடவடிக்கைககள்**<br><br>**அவ்வாறாயின் விபரம்** | |

**<u>இணைப்பு B - சம்மதக் கடிதம்</u>**

**யாருக்கு** : இணைப்பாளர்
தேசிய நேர்மைதிறன் விருதுகள்
ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீலங்கா
இல. 6, 37ஆம் ஒழுங்கை
குயின்ஸ் வீதி,
கொழும்பு 03

**யாரிடமிருந்து** : தேநேவிருது அபேட்சகர் /அபேட்சகர்கள் (பெயர்கள் /முகவரி)

**திகதி**

1. ட்ரான்ஸ் பேரன்ஸி இன்ட் நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனத்தினால் வழங்கப்படும் 2010 தேசிய நேர்மைத் திறன் (தேநேவி) விருதுக்காக எனது/எங்களுடைய பெயரை முன்மொழிவதாக எனக்கு/எங்களுக்கு அறியத்தரப்பட்டுள்ளதாக உறுதி செய்கிறேன்.
2. இந்த விண்ணப்பத்திற்கான எனது/எங்களது சம்மதத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.
3. தேநேவிக்கு எனது/எங்களது பெயர் குறிப்பிடப்பட்டால் அதனைப் பிரபல்யப்படுத்துவதற்கு ட்இஸ்ரீல நிறுவனத்திற்கு அதிகாரமளிக்கிறேன்.
4. எனது/எங்களது விண்ணப்பத்தின் தகைமை பற்றி தனிப்பட்ட ஆய்வினை நடாத்த ட்இஸ்ரீல நிறுவனத்திற்கு அதிகாரமளிக்கிறேன்.
5. விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்ததன் பின்பு சகல விண்ணப்பங்களும் ட்இஸ்ரீலவிற்குச் சொந்தமான சொத்து என்பதனை நான்/நாங்கள் ஏற்றுக் கொள்கிறேன். தேநேவி வேலைத்திட்டம் மற்றும் தேநேவி வைபவம் சம்பந்தமாக உள்ளூர் மற்றும் பிரசாரம் காரணமாக விண்ணப்பதாரியின் குரல் மற்றும் அடையாளத்தை நஷ்ட ஈடுகள் எதுவுமின்றி உபயோகிக்கும் உரிமை ட்இஸ்ரீல நிறுவனம் பெற்றுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன்.
6. விண்ணப்பதாரி என்ற வகையில் எனது/எங்களது தனிப்பட்ட தரவுகளை எனது எழுத்து மூல சம்மதமின்றி ட்இஸ்ரீல நிறுவனம் சேர்த்து வைத்தல் களஞ்சியப்படுத்தலுக்குத் தடை விதிக்கிறேன்.

7. விண்ணப்ப வழிகாட்டல்களின் கீழ் நான்/நாங்கள் நேர்மைத் திறன் உறுதி மொழியை ஏற்று நேர்மைத் திறனின் உயர் விழுமியங்களை எல்லா நேரங்களிலும் பாதுகாப்பேன்.

உண்மையுள்ள

ஒப்பம் :

பெயர் :

திகதி :

**இணைப்பு C நேர்மைத் திறன் உறுதி மொழி**

விண்ணப்பதாரியின் ஒப்பம்.

விண்ணப்பதாரியின் பெயர்:

| | | |
|---|---|---|
| ஒப்பங்கள் | | |
| திகதி | | |

Transparency International Sri Lanka
ට්‍රාන්ස්පේරන්සි ඉන්ටනැෂනල් ශ්‍රී ලංකා
ட்ரான்ஸ்பேரன்ஸி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா

Integrity Pledge
I,
…………….....………..,
with great determination
pledge to live and serve
as an honourable and incorruptible
Sri Lankan
with a deep sense
of accountability, responsibility and
transparency
in my personal, professional and
occupational life
with the noble purpose of passing on
to future generations
a nation ennobled by Integrity,
dedicating myself as a pioneer in
upholding democratic values,
human rights and duties
unsullied by forces that
impede human and national progress

**සුපිළිපන්න ප්‍රතිඥාව**

සුපිළිපන් දේශයක්
මතු පරපුරට දායාද කිරීමේ
උතුම් පරමාර්ථයෙන්
ප්‍රජාතාන්ත්‍රික වටිනාකම් ද
මිනිස් අයිතිවාසිකම් හා යුතුකම් ද
සුරැකීම වෙනුවෙන්
පුරෝගාමීව කැපවෙමින්
මනුෂ්‍යත්වයට හා රටේ ප්‍රගමනයට
අහිතකර කවර බලවේගයක් අභිමුව වුව
අකම්පිතව
පෞද්ගලික හා වෘත්තීය ජීවිතයේදී
මනා විනිවිද භාවයකින් ද
වගවීමට හා වගකීමට කැප වූ
දෘෂ්ටියකින් ද යුත්
දූසැරියෙන් තොර හරසැරි
ශ්‍රී ලාංකේය පුරවැසියෙකු සේ
අභිමානවත් ලෙස
ජීවත්වන බවට හා සේවය කරන බවට
............................................................ වන මම
දැඩි අධිෂ්ඨානයකින් යුක්තව
ප්‍රතිඥා දෙමි.

நேர்மைத்திறன் சத்தியப் பிரமாணம்
நான்
……………………………………………………
நேர்மைத்திறன் மிகு தேசமொன்றை
நாளைய சந்ததிக்கு உரித்தாக்கும் உயரிய
நோக்குடன் ஜனநாயக ரீதியான
பெறுமானங்களையும் உரிமைகளையும்
கடப்பாடுகளையும் பாதுகாப்பதற்கு
முன்னோடியாக
விளங்கி அர்ப்பணித்துச் செயலாற்றி
மானுடத்திற்கும்
நாட்டின் முன்னேற்றத்திற்கும் எதிரான
எந்தவொரு ஆதிக்க சக்திக்கு
அடிபணியாமல்
தனிப்பட்ட வாழ்விலும் தொழில் வாழ்விலும்
சிறந்த வெளிப்படைத் தன்மையுடனும்
பொறுப்புணர்வுடனும்
அர்ப்பணிப்புக் கண்ணோட்டத்துடனும்
ஊழலற்ற சிறந்த இலங்கையராக
வாழ்வேன் எனவும் சேவையாற்றுவேன்
எனவும்
திடசங்கற்பம் பூண்டு
உறுதிமொழி பகர்கின்றேன்.

**பின்னிணைப்பு D** பெயர்கள் - உறவினர்கள் அல்லாத சிபாரிசாளர்களின் தொடர்பு கொள்ளும் தகவல்

| |
|---|
| ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டநெஷனல் ஸ்ரீ லங்கா |
| தேசிய நேர்மைத் திறன் விருது |

| | |
|---|---|
| | |
| உறவினர்கள் அல்லாத சிபாரிசாளர்கள் | |
| பெயர்: | பெயர்: |
| முகவரி: | முகவரி: |
| தொடர்பு இலக்கம்: | தொடர்பு இலக்கம்: |
| மின்னஞ்சல்: | மின்னஞ்சல்: |
| ஒப்பம் மற்றும் திகதி: | ஒப்பம் மற்றும் திகதி: |

**பின்னிணைப்பு E** விருது வழங்கும் குழுவால் கருதப்படும் வரைமுறைகள்

**முயற்சி:**

- ☐ தனிநபர்:
- ☐ நிறுவனம்:

**தலையீடு**

- ☐ இருக்கும் ஆயுதங்களை அல்லது முறைமைகளைப் பயன்படுத்தல்
- ☐ தடுக்கும் முறைமைகளை உருவாக்குதல்
- ☐ புதிய அணுகுமுறை

1. பொது வரைமுறைகள்

   1.1 ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு முயற்சிகளால் ஏற்பட்ட தாக்கத்தின் முக்கியத்துவம்

   1.2 இந்த முயற்சியின் தாக்கமானது தனி மனித செல்வாக்கிற்கு அப்பால் (1 நிறுவனம், 2 பொதுமக்கள், 3 நாடு, 4 சர்வதேசம் ஆகியவற்றிற்கு சென்றடைந்தமை)

   1.3 எதிர்காலத்தில் ஊழலைத் தடுத்து நிறுத்த முன்மாதிரியை உருவாக்குதல்

   1.4 எத்துனை அளவிற்கு அந்த நபர் தவிர்க்க முடியாத கஷ்டங்களையும், சவால்களையும் எதிர்கொண்டார்.

   1.5 சாதாகமான தாக்கத்தை ஏற்படுத்த செய்யப்பட்ட தனிப்பட்ட, பொருளாதார, உடல்சார், சமூக மற்றும் தொழில்சார் இயல்புளின் அளவு

   1.6 ஊழல் எதிர்ப்பு வேலையில் ஊக்குவிப்பினை அடையாளமாய்ப் பாவிக்கும்திறன்

   **1.7** நபரின் நிலை அல்லது தொழில் ஊழல் எதிர்ப்பு இடையீட்டுக்கு உந்து சக்த்தியாக எவ்வளவு தூரம் அமைந்தது.